கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

# கைத்தறி மற்றும் துணிநூல்

# மக்கள் சாசனம்

# 2008

## மானியக் கோரிக்கை எண்.17

என் கே கே.பி. ராஜா
கைத்தறித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2008

# மக்கள் சாசனம் – 2008

## கைத்தறி மற்றும் துணிநூல் துறை

அட்டவணை

| வ. எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | துறையின் குறிக்கோள்கள் | 2 |
| 3. | நல்வாழ்வுத் திட்டங்கள் | |
| | 3.01 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் | 3 |
| | 3.02 மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் (கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்) | 4 |
| | 3.03 நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 5–6 |
| | 3.04 கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம் | 6 |
| | 3.05 கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 7 |
| | 3.06 டாக்டர் எம்ஜிஆர் கைத்தறி நெசவாளர்கள் நலவாழ்வு அறக்கட்டளையின் கீழ் உதவித் தொகை வழங்குதல் | 7–8 |
| | 3.07 இந்திய கைத்தறித் தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகை | 9 |
| | 3.08 சிக்ஷா சஉறாயோக் யோஜனா திட்டத்தின்கீழ் கல்வி உதவி தொகை | 9 |
| 4. | வளர்ச்சித் திட்டங்கள் | |
| | 4.01 இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் | 10 |
| | 4.02 பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் | 10 |
| | 4.03 நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 10 |
| | 4.04 தள்ளுபடி மானியத் திட்டம் | 10 |
| | 4.05 ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டம் | 11–15 |
| | 4.06. சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம் | 15 |
| | 4.07. புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் | 15 |

| | | |
|---|---|---|
| **5.** | **துறையின் இதர முக்கிய வளர்ச்சி மற்றும் நல்வாழ்வு பணிகள்** | |
| | 5.01 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985 | 16 |
| | 5.02 ''கைத்தறி முத்திரை'' திட்டத்தினை செயல்படுத்துதல் | 16 |
| | 5.03 கைத்தறி இரகங்களை பூகோள குறியீடு சட்டம், 1999–ன் கீழ் பதிவு செய்தல் | 17 |
| | 5.04 ஆலோசனைக் குழுக்கள் | 17 |
| | 5.05 கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் | 17 |
| 6. | ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டம் | 18–19 |
| 7. | தொழில் நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டம் (TUFS) | 20 |
| **8.** | **துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அவற்றின் செயல்பாடுகளும்** | |
| | 8.01 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை | 21 |
| | 8.02 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், லிமிடெட், சென்னை | 21 |
| | 8.03 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர் | 21–22 |
| | 8.04 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு | 22 |
| | 8.05 தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் | 22–23 |
| | 8.06 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), சென்னை | 23 |
| | 8.07 கூட்டுறவு நூற்பாலைகள் | 23 |
| 9. | 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் உள்ள முக்கிய செயல்பாடுகள் | 24 |
| 10. | முடிவுரை | 25 |

# மக்கள் சாசனம் – 2008

## கைத்தறி மற்றும் துணிநூல் துறை

### 1. முன்னுரை

கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும், அனைத்துப் பிரிவுகளின் நலனுக்காகவும் குறிப்பாக, நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுவதும், தமிழ்நாடு அரசின் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முதன்மை நோக்கமாகும்.

கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் துறைத் தலைவராவார். இவருக்கு தலைமையக அளவில் பல்வேறு அலுவலர்களும், சரக அளவில் கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்கள் உதவுகின்றனர். மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் இயங்கும் இதர கூட்டுறவு அமைப்புகளுக்கும், செயற்பதிவாளராக செயல்படும் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் மூலமாக, மாநில மற்றும் மைய அரசு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் 1988 ஆம் ஆண்டு விதிகளின் கீழ் இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவர் "மாநில துணிநூல் அதிகாரக் குழுமமாக" செயல்படுவதன் மூலம் நூற்பாலைகள், துணிநூல் ஆலைகள், பதனிடும் ஆலைகள், பின்னலாடை, கைத்தறி மற்றும் விசைத்தறிப் பிரிவுகள் சீராக செயல்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுவான பொறுப்பும் இவருக்கு உள்ளது. மாநிலத்திலுள்ள 18 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்கள் மூலமாக மாவட்ட அளவில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1103 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 147 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, தமிழ்நாடு சரிகை ஆலை, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) ஆகிய நிறுவனங்களும், இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

## 2. துறையின் குறிக்கோள்கள்

- அதிக அளவு கைத்தறி நெசவாளர்களை, கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருதல்
- நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பும், நியாயமான ஊதியமும் கிடைக்க வழிவகை செய்தல்
- கைத்தறி நெசவாளர்களுக்கு அனைத்து நல்வாழ்வு, வளர்ச்சி மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் / திட்டங்களை செயல்படுத்துதல்
- ஜவுளித் தொழிலுக்கு தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்தல்
- கைத்தறி தொழிலுக்கு கடன் வசதி வழங்க வழிவகை செய்தல்
- கைத்தறி நெசவாளர்கள் மற்றும் இதர தொழிலாளர்களின் ஒட்டு மொத்த நலனை பாதுகாத்தல்
- ஏற்றுமதியினை ஊக்குவித்தல்
- தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலின் உற்பத்தி மற்றும் விற்பனை செயல்பாடுகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
- மாநில மற்றும் மத்திய அரசின் பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து ஜவுளி ஏற்றுமதிக்கு வழிவகை செய்தல்
- ஜவுளித் தொழிலில், தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் ஊக்குவித்தல்
- ஜவுளித் தொழிலின் அனைத்து உப பிரிவுகளின் வளர்ச்சிக்கான மனித வள மேம்பாடு, சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல் மற்றும் தொழிலாளர் நலன்

## 3. நல்வாழ்வுத் திட்டங்கள்:

### 3.01. கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்

கைத்தறி நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், மாநில அரசு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தினை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. 1985–86 ஆம் ஆண்டு முதல், இத்திட்டத்தில் பங்கு பெற்று மைய அரசும் தனது பங்கினை வழங்கி வருகிறது.

**நிதியுதவியினை பகிர்ந்து கொள்ளும் முறை :**

| | |
|---|---|
| நெசவாளர் பங்கு | பெறும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 காசு வீதம் |
| மாநில அரசு பங்கு | பெறும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 4 காசு வீதம் |
| மத்திய அரசு பங்கு | பெறும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 4 காசு வீதம் |

**தகுதிகள்:**

- நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் குறைந்தது ஓர் ஆண்டு காலம் உறுப்பினராக இருத்தல் வேண்டும்
- சங்கத்தில் ரூ.100/–க்கு குறையாமல் பங்குத் தொகை வைத்திருக்க வேண்டும்
- திட்ட நிதியில் 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து சந்தா செலுத்தாதவராக இருக்கக் கூடாது.

**பயன்கள்:**

நெசவாளர் ஓய்வு பெறும்போது, கணக்கில் சேர்ந்துள்ள தொகையுடன் அரசால் வழங்கப்படும் 6.5 சதவீத வட்டியும் சேர்த்து நெசவாளருக்கு கிடைக்கும்.

### 3.02. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் (கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்)

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" என்ற காப்பீட்டுத் திட்டம், மைய அரசின் நிதிஉதவியுடன் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து, நெசவாளர்களுக்காக 2004–05 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு நெசவாளருக்கு செலுத்தப்படும் ஆண்டு காப்பீட்டுக் கட்டணம்

| | |
|---|---|
| மத்திய அரசு பங்கு | ரூ.150/– |
| இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழக பங்கு | ரூ.100/– |
| மாநில அரசு பங்கு (நெசவாளர்கள் சார்பில்) | ரூ.80/– |
| **மொத்தம்** | **ரூ.330/–** |

தகுதிகள்

- ❖ நெசவாளரின் மொத்த வருவாயில், 50 விழுக்காடுக்கு குறையாமல் கைத்தறி நெசவுத் தொழிலின் மூலம் வருவாய் ஈட்ட வேண்டும்.
- ❖ 18 முதல் 59 வயதுக்குட்பட்ட நெசவாளர்கள், இத்திட்டத்தில் சேருவதற்கு தகுதி பெறுகின்றனர்.
- ❖ பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களும், கூட்டுறவு அமைப்பில் இல்லாத நெசவாளர்களும் இத்திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பயன்கள்

நெசவாளர் 60 வயதை அடையுமுன் இறக்க நேரிட்டாலோ, ஊனமடைந்தாலோ பயனாளிகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| அ) | இயற்கை மரணம் | ரூ.60,000/– மற்றும் கோஆப்டெக்ஸ் கருணைத் தொகை ரூ.15,000/– |
| ஆ) | விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ.1,50,000/– மற்றும் கோஆப்டெக்ஸ் கருணைத் தொகை ரூ.15,000/– |
| இ) | விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | ரூ. 1,50,000/– |
| ஈ) | விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | ரூ. 75,000/– |

**3.03. நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வை பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும், நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை, 2005–2006 ஆம் ஆண்டு முதல் மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒரு நெசவாளருக்கு செலுத்தப்படும் ஆண்டு காப்பீட்டுக் கட்டணம்**

| | |
|---|---|
| மத்திய அரசு பங்கு | ரூ. 642.47 |
| மாநில அரசு பங்கு | ரூ. 89.13 |
| நெசவாளர் பங்கு<br>(நெசவாளர்கள் சார்பாக மாநில அரசால் செலுத்தப்படும் தொகை) | ரூ. 50.00 |
| **மொத்தம்** | **ரூ. 781.60** |

**தகுதிகள்:**

- நெசவாளரின் மொத்த வருவாயில், 50 விழுக்காட்டுக்கு குறையாமல் கைத்தறி நெசவுத் தொழிலின் மூலம் வருவாய் ஈட்ட வேண்டும்.
- அனைத்து நெசவாளர்களும், இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படுவார்கள். ஒரு நெசவாளர் குடும்பத்தில் 4 நபர்கள் அதாவது, கணவன், மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுவர். ஒரு நாள் முதல் 80 ஆண்டுகள் வரை வயது வரம்புக்குட்பட்டவர்கள் இத்திட்டத்தில் பயனடையலாம்.
- பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களும், கூட்டுறவு அமைப்பில் இல்லாத நெசவாளர்களும் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம்.
- கைத்தறித் தொழிலுக்குத் தொடர்புடைய துணைத்தொழில்களான பாவு ஓடுதல், கஞ்சி தோய்த்தல், சாயமிடுதல், அச்சிடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், அரசு, இத்திட்டத்தினை 2007–08 – ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்தியுள்ளது.

**பயன்கள்:**

இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளர் குடும்பத்தில் 4 நபர்கள், ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.15,000/– வரை மருத்துவ உதவி பெறலாம். நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் மருத்துவ உதவித் தொகையினை, ஐசிஐசிஐ

லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனம் வழங்கும். இத்திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய பயன்களின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஏற்கனவே உள்ள அனைத்து நோய் மற்றும் புதிய நோய்களுக்கு | ரூ.15,000/– |
| மகப்பேறு உதவித்தொகை (முதல் இரு குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.2,500/– |
| பல் சிகிச்சை | ரூ.250/– |
| கண் சிகிச்சை | ரூ.75/– |
| மூக்குக் கண்ணாடி | ரூ.250/– |
| உள்ளிருப்பு நோயாளி | ரூ.4,000/– |
| ஆயுர்வேதம் / யுனானி/ ஹோமியோபதி / சித்தா | ரூ.4,000/– |
| மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் முன்பும்/ அனுமதிக்கப்பட்ட பின்பும் | ரூ.15,000/– |
| குழந்தைகளுக்கான காப்பீடு | ரூ.500/– |
| புறநோயாளிகள் | ரூ.7,500/– |

**3.04. கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

"தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்", 01.01.1992 முதல் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தகுதிகள்:**

- நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து 2 ஆண்டுகள் நெய்து வருபவராக இருக்க வேண்டும்.
- சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து சந்தா செலுத்தாதவராக இருக்கக் கூடாது.
- இறக்கும்போது 60 வயது முடிந்தவராக இருக்கக் கூடாது.

**பயன்கள்:**

நெசவாளர், 60 வயதுக்கு முன் இறக்க நேரிட்டால், அவர் இறந்த நாளிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.550/– வழங்கப்படும்.

### 3.05. கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் திட்டம் 1.4.1997 முதல், தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தகுதிகள்:**

- ❖ மாநிலத்திலுள்ள அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் இத்திட்டத்தில் சேர தகுதி பெறுகின்றன.
- ❖ சங்கத்தில் தொடர்ந்து நெய்யும் உறுப்பினராக இருந்து 60 வயது அடைந்திருத்தல் வேண்டும்.
- ❖ திட்டத்தில் சேர விண்ணப்பிக்கும் நாளில், குறைந்தது 2 ஆண்டுகளுக்கு தொடர்ந்து நெய்யும் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
- ❖ 60 வயதை அடையும்போது, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில், 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து சந்தா செலுத்தாதவராக இருக்கக் கூடாது.

**பயன்கள்:**

60 வயது நிறைவடைந்த நெசவாளர்களுக்கு வாழ்நாள் முழுவதும் முதியோர் ஓய்வூதியமாக ரூ.400/– வழங்கப்படும்.

### 3.06. டாக்டர் எம்ஜிஆர் கைத்தறி நெசவாளர்கள் நலவாழ்வு அறக்கட்டளையின் கீழ் உதவித் தொகை வழங்குதல்

நெசவாளர்களின் பிள்ளைகள் மேற்படிப்பு பயில்வதை ஊக்குவிப்பதற்காக, அவர்களுக்கு மேற்படிப்பு உதவி தொகை வழங்கும் வகையில் “டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளை” 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 29 கல்வி பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும், இந்திய குடிமைப்பணி தேர்விற்காக, தனிப்பயிற்சி பயில்பவர்களில் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் 10–ஆம் வகுப்பு, 12–ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ – மாணவியர்களுக்கு, ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

**பயன்கள்:**

டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளை திட்டத்தின் கீழ் நெசவாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித் தொகையின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | பாடத் திட்டம் | வழங்கப்படும் உதவித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மருத்துவ பட்டப்படிப்பு | 3500 |
| 2 | பல் மருத்துவ பட்டப்படிப்பு | 3500 |
| 3 | பொறியியல் பட்டப்படிப்பு | 3500 |
| 4. | தொழில் நுட்பவியல் பட்டப்பட்டிப்பு | 3500 |
| 5 | கால்நடை மருத்துவ பட்டப்படிப்பு | 3500 |
| 6 | விவசாயம் / தோட்டக் கலை | 3000 |
| 7 | மருந்தியல் பட்டப்படிப்பு | 3000 |
| 8 | செவிலியர் பட்டப்படிப்பு | 2500 |
| 9 | முதுகலை பொறியியல் | 3500 |
| 10 | முதுகலை தொழில் நுட்பம் | 3500 |
| 11 | முதுகலை மருத்துவம் | 3500 |
| 12 | முதுகலை அறுவை சிகிச்சை | 3500 |
| 13 | முதுகலை வணிகவியல் | 3500 |
| 14 | முதுகலை (கலை) | 3500 |
| 15. | முதுகலை (அறிவியல்) | 3500 |
| 16 | முதுகலை (வணிக நிர்வாகம்) | 3500 |
| 17 | முதுகலை (கணினி பிரயோகம்) | 3500 |
| 18 | இளங்கலை | 2500 |
| 19 | இளங்கலை (அறிவியல்) | 2500 |
| 20 | இளங்கலை (வணிகவியல்) | 2500 |
| 21 | இளங்கலை (வணிக நிர்வாகம்) | 2500 |
| 22 | இளங்கலை (வணிக மேலாண்மை) | 2500 |
| 23 | இளங்கலை (கணினி பிரயோகம்) | 2500 |
| 24 | இளங்கலை (கணினி அறிவியல்) | 2500 |
| 25 | பல் தொழில் நுட்ப கல்வி | 2500 |
| 26 | இந்திய குடிமைப்பணி தேர்வு / வங்கி அலுவலர்கள் தேர்வு | 2500 |
| 27 | உணவக நிர்வாகம் மற்றும் உணவாக்கத் தொழில் | 2500 |
| 28 | அகவிலை கணக்கியல் | 3500 |
| 29 | +2 வகுப்பில் அதிக மதிப்பெண் | 2500 |
| 30 | பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் | 2000 |
| 31 | முடநீக்கியல் | 3000 |
| 32 | கைத்தறி தொழில்நுட்பவியல் | 3000 |

**3.07. இந்திய கைத்தறித் தொழில் நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகை**

சேலத்திலுள்ள, இந்திய கைத்தறித் தொழில் நுட்ப பயிலகத்தினால் நடத்தப்படும், 3 ஆண்டு கைத்தறித் தொழில் நுட்ப பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியர்களை தேர்வு செய்யும் போது, நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது.

முதலாம் ஆண்டு ரூ.400/– மாதமொன்றுக்கு

இரண்டாம் ஆண்டு ரூ.450/– மாதமொன்றுக்கு

மூன்றாம் ஆண்டு ரூ.500/– மாதமொன்றுக்கு

மேலும், அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் புத்தகம் வாங்குவதற்கென, மாதமொன்றுக்கு ரூ.60/– உதவித் தொகை வழங்கப்படுகிறது. இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்குச் சுற்றுலா செல்வதற்கு, ஆண்டொன்றுக்கு ரூ.200/– அளிக்கப்படுகிறது. கடாக் மற்றும் வெங்கடகிரி ஆகிய இடங்களிலுள்ள பயிலகங்களில், மூன்று வருட கைத்தறித் தொழில் நுட்ப பட்டய வகுப்பில் படித்து வரும் தமிழக மாணவ மாணவியர்க்கும், கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**3.08. ''சிக்ஷா சஉறாயோக் யோஜனா'' திட்டத்தின்கீழ் கல்வி உதவி தொகை**

மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் உறுப்பினராக உள்ள நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் ''சிக்ஷா சஉறாயோக் யோஜனா'' திட்டத்தில் கல்வி உதவி தொகை வழங்கப்படுகிறது. 9 – ஆம் வகுப்பு முதல் 12 – ஆம் வகுப்பு வரை, கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு அதிகபட்சம் 4 ஆண்டுகளுக்கு அல்லது 12 – ஆம் வகுப்பு முடிக்கும் வரை ஒரு காலாண்டுக்கு ரூ.300/– வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித் தொகை, ஜுன் முதல் மே முடிய உள்ள கல்வி ஆண்டுக்கு வழங்கப்படுகிறது. மேற்படி கல்வி உதவித் தொகை இத்திட்டத்தில் உள்ள நெசவாளர்களின் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

## 4. வளர்ச்சித் திட்டங்கள்:

### 4.01. இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் விழாவின்போது, ஏழை மக்களுக்கு வேட்டி, சேலை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், சுமார் 3.28 கோடி ஏழை மக்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் துணிவகைகள், மாநிலத்திலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.

### 4.02. பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும், முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு, ஆண்டு தோறும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. இலவச சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டம், கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

### 4.03. நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்

கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் 1.8.2006 முதல் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், நெசவுத் தொழிலில் ஈடுபட்டு, சொந்தமாக தறிக்கூடம் வைத்துள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, இரு மாதத்திற்கு ஒரு முறை 100 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், சொந்தமாக விசைத்தறிகள் வைத்திருக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கு, இரு மாதத்திற்கு ஒரு முறை 500 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

### 4.04 தள்ளுபடி மானியத் திட்டம்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி துணிகளின் விற்பனையினை மேம்படுத்த, கைத்தறித் துணிவகைகளின் விற்பனைக்கு 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் ஆண்டு முழுவதும் அரசால் வழங்கப்படுகிறது. அதாவது, பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.100/– இதில் எது குறைவோ, அத்தொகை, அதே போன்று பட்டு துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.200/– இதில் எது குறைவோ, அத்தொகை, என்ற வரையறைக்குட்பட்டு, தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது.

## 4.05 ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பேணவும், கைத்தறித் தொழிலை மேம்படுத்தவும், ''ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம்'' என்னும் புதிய திட்டத்தினை, 11 வது ஐந்தாண்டு திட்டத்தில், மைய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஏற்கனவே மைய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த பல்வேறு திட்டங்களான, தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா (அடிப்படை உள்ளீடு, விற்பனை ஊக்குவிப்பு போன்றவை) ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சி திட்டம் ஆகிய திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் 4 முக்கிய இனங்கள் பின்வருமாறு:–

- செறிவுப் பகுதி மேம்பாடு திட்டம்
- கைத்தறி வளர்ச்சிக்கான குழும அணுகுமுறை
- கைத்தறி நிறுவனங்களுக்கு நிதியுதவி
- புதிய யுத்திகள், விளம்பரம், மேற்பார்வை, கண்காணிப்பு, பயிற்சி மற்றும் திட்டத்தினை மதிப்பீடு செய்தல் ஆகிய பல்வேறு இனங்களுக்கு உதவித்தொகை

### அ) செறிவுப் பகுதி மேம்பாடு திட்டம்

நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு அமைப்பின் கீழ் மற்றும் கூட்டுறவு அமைப்பு சாரா கைத்தறிகள் / நெசவாளர்கள், சுமார் 300 முதல் 500 வரை எண்ணிக்கையில் இருக்கும் பகுதிகளை, கைத்தறி செறிவு பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 3 ஆண்டு காலத்திற்கு, தறி மேம்பாடு, தறியில் மாறுதல்கள் செய்தல், தறி மற்றும் தறி உபகரணங்கள் கொள்முதல் செய்தல், சாயமிடும் அலகு உருவாக்குதல், பொது வசதி மையம் நிறுவுதல், காட்சியறை நிறுவுதல், பொருட்காட்சி நடத்துதல். விளம்பரம் மற்றும் வடிவமைப்பு ஆகிய பல்வேறு இனங்களுக்கு, ஒவ்வொரு பகுதிக்கும் அதிகபட்சமாக ரூ.60.00 இலட்சம் வரை நிதியுதவி வழங்கப்படும். கைத்தறிப் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார நிலையை உயர்த்தி, அவர்களை தற்சார்பு அடையச் செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

செறிவுப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | இனங்கள் | ஒரு கைத்தறி பகுதிக்கான நிதியுதவி | நிதி பங்கீட்டு வீதம் மைய அரசு /மாநில அரசு/: செயல்படுத்தும் முகைமை / பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | அடிப்படை ஆய்வு, கூர்ந்தாய்வு அறிக்கை தயாரித்தல், சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் | ரூ. 1.25 இலட்சம் – ஒருமுறை | 100% மைய அரசு |
| 2 | கூட்டமைப்பு உருவாக்கம் | ரூ.50,000/– – ஒருமுறை | 100% மைய அரசு |
| 3 | நூல் கிடங்குகளுக்கான தொகுப்பு நிதி | ரூ.3.00 இலட்சம் – ஒருமுறை | 100% மைய அரசு |
| 4 | வடிவமைப்பு மேம்பாடு மற்றும் இரக மாற்றம் | ரூ.3.00 இலட்சம் கணினி மென்பொருள் மூலம் வடிவமைக்கப்பட்ட ஜவுளி வடிவமைப்புகளை கொள்முதல் செய்தல், வண்ணங்கள் குறித்த மனப்பாங்கு மற்றும் சந்தை கணிப்பு – ஒருமுறை | 50:50 |
| | | ரூ.6.00 இலட்சம் – 3 ஆண்டுகளுக்கு வடிவமைப்பாளரை நியமித்தல் | 100% மைய அரசு |
| 5 | கட்டமைப்பு வசதிகள் / பொது வசதி மையம் (மொத்த திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு என்ற உச்சவரம்புக்குட்பட்டு) | ரூ.30.00 இலட்சம் – ஒருமுறை | பொது வசதி மையம் – 100% மைய அரசு, சாயச்சாலை – 80:20 மைய அரசு : மாநில அரசு, சாயச்சாலை அமைப்பது தொடர்பாக மைய உயர் அலுவலர் தலைமையிலான குழு ஒப்புதல் அளிக்கும். |
| 6 | விளம்பரங்கள் (மொத்த திட்ட மதிப்பீட்டில் 20 விழுக்காடு என்ற உச்சவரம்புக்குட்பட்டு) | ரூ.50,000/– விளம்பரங்கள், கையேடுகள் சிற்றேடுகள் மற்றும் துண்டுச்சீட்டுகள் வெளியீடு – 3 ஆண்டுகளுக்கு | 75:25 |
| | | ரூ.6.00 இலட்சம் 3 கண்காட்சிகள் – 3 ஆண்டுகளுக்கு | 75:25 |
| | | ரூ.3.00 இலட்சம், வாங்குவோர் – விற்போர் சந்திப்பு கூட்டங்கள் நடத்துதல் – 3 ஆண்டுகளுக்கு, ஆறு நபர்களுக்கு. | 75:25 |
| | | ரூ.1.00 இலட்சம் சந்தை நிலவர ஆய்வு – ஒருமுறை | 75:25 |
| | | ரூ.3.00 இலட்சம் நெசவாளர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த பல்வேறு பகுதிகளுக்கு அழைத்து செல்ல ஒரு நெசவாளருக்கு ரூ.3000/– வீதம் 3 ஆண்டுகளுக்கு | 100% மைய அரசு |
| | | ரூ.25,000/– இணைய தள உருவாக்கத்திற்கென – ஒருமுறை | 100% மைய அரசு |
| 7 | திட்ட மேலாண்மை ஒதுக்கீடு | ரூ.7.20 இலட்சம் – 3 ஆண்டுகளுக்கு | 100% மைய அரசு |

## ஆ) கைத்தறி வளர்ச்சிக்கான குழும அணுகுமுறை

குழும அணுகுமுறை திட்டமானது, செறிவுப் பகுதி மேம்பாட்டு பிரிவின் கீழ் வராத, கைத்தறி நெசவாளர்களுக்கு, தற்போதைய சந்தை நிலவரத்திற்கேற்ப மதிப்பு கூட்டு துணி வகைகளை உற்பத்தி செய்து பயனடைய வழிவகுத்துள்ளது. குழும அணுகுமுறையின் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகள் பின்வருமாறு:–

### (i) அடிப்படை உள்ளீடு:

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் குழும அணுகுமுறையின் கீழ் வரும் பல்வேறு பிரிவுகளில் அடிப்படை உள்ளீடும் ஒன்றாகும். அடிப்படை உள்ளீட்டில், விளிம்பு தொகை, புதிய கைத்தறி, டாபி, ஜக்கார்டு, தறி உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு தேவையான நிதியினை, மைய அரசு, மாநில அரசு மற்றும் செயல்படுத்தும் நிறுவனம் அல்லது பயனாளிகளால் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

### ii) திறன் மேம்பாடு:

சந்தை நிலவரத்திற்கேற்ப, ஜவுளி இரகங்களை உற்பத்தி செய்யும் இரகங்களை உற்பத்தி செய்யும் திறமையை மேம்படுத்தும் வகையில், 20 நெசவாளர்கள் கொண்ட குழுக்களுக்கு நெசவு நெய்தல், சாயம் தோய்த்தல், புதிய வடிவமைப்புகள் தயாரித்தல் ஆகியவற்றிற்கு பயிற்சி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குழும அணுகுமுறைப் பிரிவில், 100 விழுக்காடு மானியத்துடன் செயற்படுத்தவும் மைய அரசு முன்வந்துள்ளது.

### iii) தறிக்கூடம் கட்டுதல்:

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வீட்டின் அருகில் சொந்த நிலம் வைத்திருக்கும் நெசவாளர்களுக்கு, தறிக்கூடம் கட்டுவதற்கான நிதியுதவி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. வீடு கட்டும் திட்டம், ‘‘இந்திரா ஆவாஸ் யோஜனா’’ திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நெசவாளர்களுக்கு, தறிக் கூடம் அமைக்க, ரூ.25,000/– ம், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள நெசவாளர்களுக்கு மைய அரசின் பங்காக ரூ.18,750/– ம் வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை ரூ.6250/– மாநில அரசு அல்லது பயனாளிகளால் ஏற்று கொள்ளப்படுகிறது.

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் குழும அணுகுமுறை பிரிவில், வழங்கப்பட்டு வரும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பிரிவு | நிதியுதவி ரூ. | நிதி பங்கேற்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | பயனாளி |
| 1 | அடிப்படை உள்ளீடுகள் | | | | |
| | அ) விளிம்புத் தொகை | 6000 | 70% | 20% | 10% |
| | ஆ) புதிய தறிகள் கொள்முதல் | 8000 | 70% | 20% | 10% |
| | இ) டாபி கொள்முதல் | 4000 | 70% | 20% | 10% |
| | ஈ)ஜெக்கார்டு கொள்முதல் | 6000 | 70% | 20% | 10% |
| | உ) தறி உபகரணங்கள் கொள்முதல் | 2000 | 70% | 20% | 10% |
| 2 | திறன் மேம்பாட்டு பயிற்சி (20 நபர்களுக்கு) | | | | |
| | அ) நெசவு | 3,00,000 | 100% மைய அரசு | | |
| | ஆ) சாயம் தோய்த்தல் | 1,00,000 | 100% மைய அரசு | | |
| | இ) வடிவமைப்பு | 50,000 | 100% மைய அரசு | | |
| | ஆ) மேலாண்மை பயிற்சி | 25,000 | 100% மைய அரசு | | |
| 3 | தறிக்கூடம் அமைத்தல் (20 சதுர மீட்டர் பரப்பளவு) | | | | |
| | அ) வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு | 25000 | 25000 (100 %) | -- | 5000 |
| | ஆ) வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு | 25000 | 18750 (75%) | 6250 25% | 5000 |

**இ) கைத்தறி நிறுவனங்களுக்கு நிதி உதவி:**

**i) விற்பனை ஊக்குவிப்பு திட்டம்:**

கைத்தறித் துணிகளை சந்தை விலைக்கு ஈடுகொடுத்து விற்பனை செய்யும் வகையில், கைத்தறித் தொழிலுக்கு விற்பனை ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. இந்த விற்பனை ஊக்குவிப்பு தொகை, நுகர்வோரைக் கவரும் வண்ணம் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு, கைத்தறி நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு கைத்தறி துணி வகைகளின் ஒட்டுமொத்த விற்பனைக்கு வழிவகுக்கிறது. மாநில கைத்தறி கழகங்கள், தலைமை கூட்டுறவு சங்கங்கள், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசீய கைத்தறி நிறுவனங்களுக்கு விற்பனை ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளின் சராசரி விற்பனையில், 10 விழுக்காடு தொகை விற்பனை ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**ii) கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்:**

இத்திட்டத்தின்கீழ் தேசிய மற்றும் மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்கள், கைத்தறிக் கழகங்கள், தலைமை கூட்டுறவு சங்கங்கள் போன்றவற்றின் காசுக்கடன் மற்றும் நடைமுறை மூலதனம் போன்றவற்றை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி, 50:50 வீதம் மத்திய / மாநில அரசுகளால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

**ஈ) புதிய யுத்திகள், விளம்பரம், கண்காணித்தல், மேற்பார்வைப் பயிற்சி மற்றும் திட்ட மதிப்பாய்வு:**

ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், திட்டத் தொகையில் 10 விழுக்காடு தொகை புதிய யுத்திகளுக்கும், (Innovative ideas) விளம்பரம், கண்காணித்தல், பயிற்சி மற்றும் திட்ட மதிப்பாய்வு போன்றவற்றிற்கு 2 விழுக்காடு திட்ட நிதியும் பயன்படுத்தலாம்.

**4.06. சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்**

கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல் நாட்டுச் சந்தையில், கைத்தறித் துணி விற்பனையை விரிவுபடுத்துவதற்கும், தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித்துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தினை 1975–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஒவ்வொரு ஆண்டும் ரூ.50,000/– செலவில் வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**4.07. புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்**

புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த புதிய வடிவமைப்பினை உருவாக்கும் நெசவாளர்களுக்கு, பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும், அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த வடிவமைப்புக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000/– |
| இரண்டாம் பரிசு | ரூ. 3,000/– |
| மூன்றாம் பரிசு | ரூ. 2,000/– |

சந்தையில் எளிதாக விற்பனையாவதற்கும், ஏற்றுமதியாவதற்கும் வசதியாக புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு இத்திட்டம் உதவிடும்.

## 5. துறையின் இதர முக்கிய வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுப் பணிகள்

### 5.01 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும், விசைத்தறி ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க 1985, கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் இயற்றி, மைய அரசு கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய, 11 வகை நெசவு இரகங்களை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 11 இரகங்கள் விவரம்:–

| | | |
|---|---|---|
| (1) சேலை | (2)வேட்டி | (3) துண்டு, கம்சா மற்றும் அங்கவஸ்திரம் |
| (4) லுங்கி | (5) பாவாடை, தாவணி, ஜடார் மேகலா/பாநெக் | (6) ஜமக்காளம், டர்ரி/டர்ரட் |
| (7) டிரஸ் மெட்டீரியல்ஸ் | (8) பேரெக் பிளாங்கெட்ஸ், கம்பல் / கம்பளி | (9) ஷால், லாய், மப்ளர், பங்கி முதலியன |
| (10) உல்லன் டுவீடு | (11) கேஸ், பெட்சீட், பெட் கவர், கவுண்டர் பேன், பர்னிசிங் (டேப்ஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உள்பட) | |

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை தமிழ்நாட்டில் முனைப்புடன் செயல்படுத்தும் வகையில், அமலாக்கப்பிரிவு ஒன்று, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் / அமலாக்க அலுவலர் அலுவலகமும், சரக அளவில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 5 உதவி அமலாக்க அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

### 5.02 "கைத்தறி முத்திரை" திட்டத்தினை செயல்படுத்துதல்

கைத்தறி இரகங்கங்களுக்கென தனி அடையாளம் வழங்கி, விளம்பரம் மூலம் விற்பனையினை மேம்படுத்தி, தமிழ்நாட்டில் "கைத்தறி முத்திரை"–யினை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைத்தறி முத்திரை, மக்களை ஈர்க்கும் வகையில் செய்திட விழிப்புணர்வு கூட்டங்கள் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, குறிஞ்சிப்பாடி, மதுரை, ஈரோடு, கும்பகோணம் ஆகிய 6 செறிவு பகுதிகளில் (Clusters), ஜவுளிக் குழுவுடன் (Textile Committee) இணைந்து நடத்தப்பட்டன. இதுவரை, 724 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 1324 தனியார் நெசவாளர்களும் கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 5.03 கைத்தறி இரகங்களை பூகோள குறியீடு சட்டம், 1999–ன் கீழ் பதிவு செய்தல்

கைத்தறி இரகங்களின் பாரம்பரியத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன், 'காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்', 'பவானி ஜமக்காளம்' மற்றும் 'மதுரை சுங்குடி' புடவைகள் காப்புரிமை பெறும் வகையில், பூகோள குறியீடு சட்டம், 1999–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், சேலம் பட்டு, ஆரணி பட்டு மற்றும் கோவை கோரா காட்டன் ஆகிய பாரம்பரிய கைத்தறி இரகங்களை பூகோள குறியீடுச் சட்டம் 1999, – ன் கீழ் பதிவு செய்ய, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள், பூகோள குறியீடு பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பூகோள குறியீடு பதிவாளர் அலுவலகம் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்ப எண்கள் 92, 93, 94 – ல் உள்ள தொழில்நுட்ப குறியீடுகள் மற்றும் இதர விவரங்களை புத்தக எண்.23 – ல் வெளியிட்டுள்ளது. பூகோள குறியீடு சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள காலக்கெடு முடிவடைந்த பின்னர், உரிய சான்றிதழ்கள் பூகோள குறியீடு பதிவாளர் அலுவலகத்தால் வழங்கப்படும்.

### 5.04 ஆலோசனைக் குழுக்கள்

கைத்தறி, விசைத்தறி மற்றும் துணித் தொழிலில் ஏற்படும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் குறைகளை முழுமையாக ஆய்ந்து, அவற்றிற்கான உரிய தீர்வுகளை, அரசுக்கு பரிந்துரை செய்யும் பொருட்டும், மாநில அளவிலான கைத்தறி மற்றும் துணித் தொழில் ஆலோசனைக் குழு (State Level Advisory Committee for Handlooms and Textiles), 21.2.2007–ம் தேதியிட்ட அரசாணையின்படி அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல், மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்களும் 5.3.2007–ம் தேதியிட்ட அரசாணையின்படி, அமைக்கப்பட்டுள்ளன. ஆலோசனைக்குழுக் கூட்டங்கள், அவ்வப்போது நடத்தப்பட்டு கைத்தறி, விசைத்தறி மற்றும் துணி தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது.

### 5.05 கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்கள் கிடைக்க ஏதுவாக, கூட்டுறவு அமைப்பிலுள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கூட்டுறவின் கீழ், உள்ள 1,65,256 நெசவாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 6. ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டம்

ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் மற்றும் ஜவுளி தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் இணைத்து, ‘‘ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா’’ திட்டத்தினை, 2005–06 ஆம் ஆண்டில் மைய அரசு அறிமுகப்படுத்தியது. ஜவுளித் தொழிலுக்கு, உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, சர்வதேச சுற்றுச் சூழல் மற்றும் சமூக தரத்தினை பெறுவதன் மூலம், ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பினை அதிகரிக்கச் செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**திட்ட இனங்கள்:–**

| | |
|---|---|
| தொகுதி:அ | நிலம் |
| தொகுதி:ஆ | பொது உட்கட்டமைப்பு வசதிகளான சுற்றுச்சுவர், சாலைகள், கழிவுநீர், குடிநீர் வசதி, தற்காப்பு மின் உற்பத்தி நிலையம் உட்பட மின்வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு, தொலை தொடர்பு வசதிகள் உள்ளிட்டவை |
| தொகுதி:இ | தரப் பரிசோதனை நிலையம், வடிவமைப்பு நிலையம், பயிற்சி மையம், வணிக மையம் / கண்காட்சி மையம், சரக்கிருப்பு வசதி / மூலப்பொருள் கிடங்கு, குழந்தைகள் காப்பகம், சிற்றுண்டி நிலையம், தொழிலாளர் விடுதி, சேவை அலுவலகங்கள், தொழிலாளர் ஓய்வு அறை , பொழுதுபோக்கு வசதிகள் போன்ற பொது வசதிகள் ஏற்படுத்துவதற்கான கட்டுமானப் பணிகள் |
| தொகுதி:ஈ | உற்பத்தியினை மேற்கொள்ள, ஆலை கட்டுமானங்கள் |
| தொகுதி:உ | தொழிற்சாலையிலுள்ள இயந்திரச் சாதனங்கள் |

**செயல்படுத்தப்படும் முறை:**

- திட்டத்தின் கீழான ஒவ்வொரு பூங்காவிலும் மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் உதவியுடன் சிறப்பு நோக்க நிறுவனத்தின் (Special Purpose Vehicles) மூலம் செயல்படுத்தப்படும்
- ஒவ்வொரு ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கும் உள்ளூர் தொழில் பிரதிநிதிகள், நிதி நிறுவனங்கள், மாநில மற்றும் மைய அரசுகள் ஆகியோரைக் கொண்ட சிறப்பு நோக்க நிறுவனம் அமைக்கப்படும்.
- பூங்கா அமைக்க தேவையான நிலத்தினை கொள்முதல் செய்வது, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, மேம்படுத்தப்பட்ட நிலத்தினை தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிக்க கட்டணங்களை வசூலிப்பது உள்ளிட்டவை சிறப்பு நோக்க நிறுவனத்தின் (SPV) பணிகளாகும்.

**மாநில அரசின் பணி:**

அ. ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்கத் தேவையான, ஒப்புதல்கள் அனைத்தும் வழங்குதல் மற்றும் தேவையான மின்வசதி, குடிநீர் மற்றும் இதர வசதிகள் வழங்குதல்

ஆ. தகுதி வாய்ந்த நிலத்தினை அடையாளம் காணவும், கொள்முதல் செய்யவும் உதவுதல்

இ. மாநில அரசின் நிறுவனங்களான உட்கட்டமைப்பு / தொழில் வளர்ச்சி கழகங்கள், சிறப்பு நோக்க நிறுவனத்தின் (SPV) பங்குகளில் முதலீடு மேற்கொண்டு திட்டத்தில் பங்கேற்கலாம் அல்லது மானியம் வழங்கலாம்

ஈ. ஒருங்கிணைந்த ஜவுளி பூங்காவில் அமைந்துள்ள நிறுவனங்களுக்காக இணக்கமான, எளிமையான தொழிலாளர் சட்டங்களை உருவாக்குதல்

உ. நிலம் கொள்முதல் செய்வதற்கான பத்திரப் பதிவு கட்டண சலுகைகளை வழங்குதல்

**நிதியுதவியினை பகிர்ந்து கொள்ளும் முறை :**

ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்கும் திட்டத்தின்கீழ், திட்டத் தொகையில் 40% தொகையினை ரூ.40 கோடிக்கு மிகாமல் மானியமாகவோ அல்லது பங்குத் தொகையாகவோ மத்திய அரசு வழங்கும். எனினும் மத்திய அரசு / மாநில அரசு / மாநில தொழில் வளர்ச்சி கழகங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த பங்களிப்பு 49% –ற்கு மிகாமல் இருக்கவேண்டும்.

## 7. தொழில் நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டம் (TUFS)

ஜவுளி மற்றும் சணல் தொழில்களுக்காக தொழில் நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தினை, மத்திய அரசின் ஜவுளி அமைச்சகம், 01.04.1999–ல் அறிமுகப்படுத்தியது. பின்னர் இத்திட்டம் படிப்படியாக நீட்டிக்கப்பட்டு, தற்போது 11–வது ஐந்தாண்டு திட்டம் வரை (2011–12) நீட்டிக்கப்பட்டுள்ளது.

**பயன்கள்:**

- 5 விழுக்காடு வட்டியினை திரும்ப பெறுதல் (அல்லது)
- 5 விழுக்காடு பரிமாற்ற வேறுபாடுகள் (அல்லது)
- சிறு தொழில்களுக்கு, 15 விழுக்காடு கடனுடன் கூடிய மூலதன மானியம் (அல்லது)
- விசைத்தறி தொழிலுக்கு, 20 விழுக்காடு கடனுடன் கூடிய மூலதன மானியம் (அல்லது)
- சில குறிப்பிட்ட பதனிடும் இயந்திரங்களுக்கு, 5 விழுக்காடு வட்டி மானியத்தை திரும்பப் பெறுதல் மற்றும் 10 விழுக்காடு மூலதன மானியம்

**தகுதி பெறும் தொழில்கள்:**

ஜவுளி தொழிலின் துணைத் தொழில்களான நூற்பு, பஞ்சு பிரித்தல் மற்றும் பதனிடுதல், பட்டு நூல் சுற்றுதல் மற்றும் முறுக்கேற்றுதல், செயற்கை இழை / விஸ்கோஸ் தயாரித்தல், நெசவு / பின்னலாடை தொழில், தொழில் நுட்ப துணிகள், ஆலைகள் மற்றும் சணல் தொழில் ஆகிய தொழில்கள் தொழில் நுட்ப மேம்பாட்டு நிதிதிட்டத்தின் கீழ் தொழில் நுட்ப மேம்பாட்டிற்கான சலுகைகளைப் பெற, தகுதி பெறுகின்றன. தொழில் கழகங்கள், பொறுப்பு கழகங்கள் (அல்லது) கூட்டுறவு சங்கங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பொது வசதி உட்கட்டமைப்பு வசதிக்கான முதலீட்டிற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்கள் மேம்படுத்தப்பட்ட உலோக சட்டங்களை கைத்தறிகளில் பயன்படுத்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 8. துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அவற்றின் செயல்பாடுகளும்

### 8.01 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை.

"கோ–ஆப்டெக்ஸ்" என அனைவராலும் விரும்பி அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், 1935 ஆம் ஆண்டு, கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறித் தொழிலை ஒருங்கிணைத்து, மேம்பாடு செய்யும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் பங்கீடு செய்வது, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை கொள்முதல் செய்து, அதனுடைய 209 (தமிழகத்தில் 139 விற்பனை நிலையங்கள் மற்றும் இதர மாநிலங்களில் 70 விற்பனை நிலையங்கள்) விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வது போன்ற பணிகளை செய்து வருகிறது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்காணும் அரசு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

- அரசு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்
- முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்
- பள்ளி மாணவர்கட்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது "கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்" என்ற துணை நிறுவனத்தின் மூலம், வீட்டுப்பயன்பாட்டு இரகங்களான டெர்ரி டவல்கள், திரைச் சீலை இரகங்கள், படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், சிறிய அளவிலான துண்டுகள், கைலிகள், சட்டைத் துணி வகைகள் மற்றும் சமையலறை உபயோகிப்பு இரகங்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

### 8.02 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், லிமிடெட், சென்னை.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தனது செயல்பாட்டினை, 1964 – ஆம் ஆண்டில் தொடங்கி, கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாத நெசவாளர்களுக்குக் கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காகக் கடனுதவி வழங்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

### 8.03 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்.

தமிழ்நாடு பஞ்சாலை கழகம் லிமிடெட், 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக் கழகத்தின் கீழ், முறையே 96 தறிகளைக் கொண்ட 2 விசைத்தறி கூடங்கள் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையிலும், ஈரோடு மாவட்டம் சிவகிரியிலும் உள்ளன. மேலும்,

கோவை குறிச்சி பகுதியில் 12 தானியங்கி தறிகளைக் கொண்ட தறிக்கூடம் ஒன்றும் உள்ளது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், பாலியஸ்டர் துணி வகைகளை குறிச்சி தானியங்கி கூடம், சிவகிரி மற்றும் அருப்புக்கோட்டை விசைத்தறி கூடங்களில் உற்பத்தி செய்து வருகிறது.

அரசின் இலவச சீருடைத்துணி வழங்கும் திட்டத்திற்கான வெள்ளை நிற சட்டைத் துணி, நீல நிற தாவணி மற்றும் கேஸ்மண்ட் துணி போன்றவற்றையும், இக் கழகம் உற்பத்தி செய்து வருகிறது. மேலும், இக்கழகம் பாலியஸ்டர் சீருடைத் துணி தயாரித்து, உற்பத்தி செய்து வழங்குவதற்கான ஆணைகளை மாநிலப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், காவல் துறை மற்றும் பிற பொது நிறுவனங்களிடமிருந்து பெற்று வழங்கி வருகிறது. இதன் மூலம், இக்கழகம் தமிழகத்தின் நிறுவனங்களுக்கான சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது.

**8.04 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு.**

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளையும் பருத்தி மற்றும் செயற்கை இழை நூலினை பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை, ஒரு மாதத்தில், சுமார் 15.00 இலட்சம் மீட்டர் துணிகளை, பதனிடும் திறன் பெற்றுள்ளது. இவ்வாலை, அரசின் சீருடை திட்டத்திற்கு தேவைப்படும் துணிகளை பதனிட்டு வழங்கும் பணியினை மேற்கொள்வதோடு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், சர்வோதயா சங்கம், மத்திய சிறைச்சாலை, கேரளா மற்றும் கர்நாடகா கைத்தறி வளர்ச்சி கழகங்களிடமிருந்தும் மற்றும் தனியார் ஏற்றுமதியாளர்களிடமிருந்து வழங்கப்படும் துணிகளையும் பெற்று பதனிட்டு வருகிறது.

**8.05 தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்.**

தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம், ISO 9001 சான்று பெற்ற ஓர் மாநிலஅரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான தரமான சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது. இந்நிறுவனம், சரிகை உற்பத்தியினை மேற்கொள்வதுடன், மத்திய சரிகை கொள்முதல் குழுவின் ஒதுக்கீட்டு ஆணையின்படி பெறப்படும் சரிகை பார்சல்களை தரப்பரிசோதனை மேற்கொள்ளும் பணியினையும் செய்து

வருகின்றது. மேலும், ''எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்'' மூலம், சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையை கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகளில் உள்ள சரிகையினை எவ்வித சேதாரமின்றி தரப்பரிசோதனை மேற்கொள்ளும் பணியினையும், இந்நிறுவனம், மேற்கொண்டு வருகின்றது.

**8.06 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), சென்னை.**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினைச் சீராக்கும் பொருட்டு, டிசம்பர், 1994 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை நியாயமான விலையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து பங்கீடு செய்வதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

**8.07 கூட்டுறவு நூற்பாலைகள்.**

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான தரமான சிட்டா நூலினையும், விசைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கோன் (Cone yarn) நூலினையும் நியாயமான விலையில் தங்குதடையின்றி வழங்கும் நோக்கத்திற்காக, 1958 முதல் 1985 வரை, 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.70 இலட்சம் கதிர் திறனுடன் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட 18 கூட்டுறவு நூற்பாலைகளில், கீழ்க்கண்ட 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது இயங்கி வருகின்றன.

- பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம் (தூத்துக்குடி மாவட்டம்).
- அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்).
- தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்).
- புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்)
- கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி (கன்னியாகுமரி மாவட்டம்)

கைத்தறி நெசவாளர்களின் சிட்டநூல் தேவையினை, மேற்கண்ட 5 கூட்டுறவு நூற்பாலைகள் நிறைவு செய்து வருகின்றன.

## 9. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் உள்ளடக்கிய முக்கிய செயல்பாடுகள்

| வ. எண் | செயல்பாடு | தகுதி | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| 1 | நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நெசவாளரை உறுப்பினராக சேர்த்தல் | சங்கம் அமைந்துள்ள ஆளுமை எல்லைக்குட்பட்ட, நெசவுத் தொழில் தெரிந்துள்ள சொந்தமாக தறி உள்ளவர் | சங்க தலைவர் / தனி அலுவலர் / செயலர் / ஆட்சியர் |
| 2 | புதிய நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைத்தல் | குறைந்தது 25 நெசவாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும். அவர்களில், முதன்மை அமைப்பாளர் தேர்வு செய்யப்பட்டு சங்கம் அமைப்பதற்கான தகுந்த விண்ணப்பத்தினை சம்பந்தப்பட்ட சரக துணை / உதவி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். | சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை / உதவி இயக்குநர் |
| 3 | உறுப்பினர் தகுதி இழத்தல் | 1983 – ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், பிரிவு 23இல் குறிப்பிடப் பட்டுள்ளவாறு சங்க உறுப்பினர் தகுதி இழக்கிறார். | சங்க நிர்வாக குழு (மேல் முறையீட்டு அலுவலர் – கைத்தறி மற்றும் துணிநூல் துணை / உதவி இயக்குநர்) |
| 4 | உறுப்பினரை சங்கத்திலிருந்து நீக்குதல் | சங்க நலனுக்கு எதிராக செயல்படும் உறுப்பினரை பொது குழுவை கூட்டி தீர்மானம் நிறைவேற்றி சங்கத்திலிருந்து நீக்கலாம். இத் தீர்மானம் சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை / உதவி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். (தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு, 25) | சங்க நிர்வாகக் குழு / ஆட்சியர் / தனி அலுவலர் |
| 5 | பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சேவையை பெறும் உரிமைகளும் மற்றும் குறைகளைக் களைதலும் | எந்த ஒரு உறுப்பினரும் சங்க சேவைகள் பெறுவதற்கும், குறைகளைக் களைவதற்கும் பதிவாளருக்கு விண்ணப்பிக் கலாம். (தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு, 24) | சங்க நிர்வாகக் குழு / ஆட்சியர் / தனி அலுவலர் |
| 6 | சங்கக் கணக்குகளை உறுப்பினர் ஆய்வு செய்தல் | சங்க உறுப்பினரோ, அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபரோ உறுப்பினர் தொடர்புடைய கணக்கு வழக்குகளை ஆய்வு செய்யலாம். (தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு 27) | சங்க நிர்வாகக் குழு / ஆட்சியர் / தனி அலுவலர் |
| 7 | பிற குறைகள் தீர்ப்பதற்கு | நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினராக இருக்க வேண்டும். | சங்க நிர்வாகக் குழு / ஆட்சியர் / தனி அலுவலர் |

## 10. முடிவுரை:

- நெசவாளர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில், சம்பந்தப்பட்ட சரக துணை இயக்குநர் / கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும், கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரகத்திலும் மனுக்கள் பெறப்படுகின்றன.

- பல்வேறு திட்டங்களின் பயன்களைப் பெற, அந்தந்த பகுதிகளிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் / தனி அலுவலர் (அல்லது) சம்பந்தப்பட்ட சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் (அல்லது) கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரகத்தை அணுகலாம்.

**என்கேகே. பி. ராஜா**
**கைத்தறித் துறை அமைச்சர்**